பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர் : 14] சென்னை : வைகாசி 26உ (9—6—67) வெள்ளி ★ வெளியூர் : வைகாசி 27உ (10—6—67) சனி [இதழ் : 299

பங்கீட்டுக் கடைகளில் கடலைப் பருப்பு!

சென்னை, ஜூன் 8—

"ஜூன் 12-ம் நாள் முதல் சென்னை நகரில் உள்ள உணவுப் பங்கீட்டுக் கடைகள், மாதர் கூட்டுறவுகள், மற்ற கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு ரேஷன் கார்டுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் கடலைப் பருப்புத் தரப்படும்"

என்று, தமிழக உணவுத் துறை தெரிவிக்கிறது-

மத்திய அரசின் மக்கள் விரோதத் திட்டம்

மாநில அரசுகளிடம் பாரபட்சம் காட்டும் போக்கு!

'வருமானமும் அதிகாரமும் டில்லியிலேயே குவிக்கப்பட்டிருப்பதா ?'— நாடாளுமன்றத்தில் கி. மனோகரன் கண்டன முழக்கம்

புதுடில்லி, ஜூன் 8—

"மத்திய அரசின் வரவு – செலவுத் திட்டம், சமூக விரோத—தேசிய விரோத—மக்கள் விரோதத் திட்டமாகும். நிதியமைச்சர் எவ்விதக் கவலையும் கொள்ளாமல், மக்களின் அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்களான காப்பி, தேயிலை, புகையிலை போன்றவற்றின் மீது வரி விதித்திருக்கிறார்"

என்று நாடாளுமன்றத்தில், வரவு - செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் தி.மு.க. குழுத் துணைத் தலைவர் கி. மனோகரன் கண்டித்தார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"மத்திய–மாநில அரசுகளின் சுமூகமான உறவைப் பேணிக் காத்து வருமாறு நிதியமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரசல்லாத மாநில அரசுகளிடம் எவ்விதமான அரசியல் குரோதமும் காட்டக்கூடாது.

நிதியமைச்சர் எப்பொழுதுமே தயாராக வைத்துக்கொண்டிருக்கும் 'பணமில்லை' என்ற பதிலிலிருந்து சற்று வழுவி, ஏற்கனவே மாநிலங்கள் செயல்படுத்தத் துவங்கியிருக்கும் திட்டங்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும்.

மாநில–மத்திய அரசுகளிடை சுமூகமான உறவு நிலவ ஓரளவு 'நடுநிலை'ச் சுதந்தர அந்தஸ்தை மாநிலங்களுக்குத் தருவது சம்பந்தமாக ஒரு உடன்பாடு ஏற்பட வேண்டும்.

பொருளாதாரத் தன் மதிப்பை மாநிலங்களுக்குத் தர மறுப்பதும், அதிகாரத்தையெல்லாம் மத்திய அரசே வைத்துக் கொண்டிருப்பதும் ஒழிய வேண்டும்.

அரசியல் சட்டத்தின்படி பொதுப் பட்டியலில் உள்ள எந்தச் சட்டத்தையும் குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற்றுத்தான் அமுல்படுத்தவேண்டும் என்று இருப்பது மாநிலங்களைத் தாழ்மைப்படுத்துவதாகும்.

மாநிலச் சட்டமன்றங்கள் அதிகாரமேதுமில்லாது நகராட்சி மன்றங்கள்போல் ஆக்கப்பட்டுவிட்டிருக்கின்றன.

இந்தச் சமநிலையற்ற கூட்டாட்சி முறையைத் திருத்தி, மாநிலங்களின் உரிமையை அவைகளிடமே ஒப்படைக்க வேண்டும்.

இப்பொழுது மத்திய அரசு மட்டுமே அனுபவித்துக் கொண்டுவரும் பொது வரியிலிருந்து மாநிலங்களுக்கும் பங்கு தரவேண்டும்.

அரசியல் சட்டத்தின்படி, பெரும் வருவாய்க்குரிய வருமான வரி, மாநில-மத்திய அரசுகள் பங்கு போட்டுக்கொள்ளும் வகையில் இருந்து வரினும், விற்பனைவரி, மத்திய அரசுக்குப் பணத்தைக் குவிக்கும் ஒரு இனமாகவே இப்பொழுது ஆகிவிட்டது.

நான்காவது திட்டத்தை நிறைவேற்றத் தேவைப்படும் எல்லா உதவிகளையும் தமிழக அரசுக்கு அளிக்க வேண்டும்.

தூத்துக்குடித் துறைமுகத்தைப் பெரிய துறைமுகமாக மாற்றப் போகிறீர்களா இல்லையா என்பதற்கு நிதியமைச்சரிடமிருந்து உறுதியான பதிலை எதிர்பார்க்கிறேன்."

'நம் நாடு'

நாளைய இதழில்

★

சூயஸ் முதல் அகோபா வரை!

1. ஒட்டகமும் ஊசி முனையும்!

நிலைமை உணர்ந்து

ஐ. நா.-வின் கட்டளைக்கு பணிந்தது எகிப்து!

முதலில் குண்டு வெடித்தது தான்தான் என இஸ்ரேலும் ஒப்புக்கொண்டது

'ஜெருசலேமை மீண்டும் பிரிக்கவிடோம்' எனச் சூளுரை

ஐ. நா., ஜூன் 8—

ஐ.நா.-வின் வேண்டுகோளுக்கிணங்கப் போர் நிறுத்தத்துக்கு ஒத்துக்கொள்ளுவதாக இன்று எகிப்து அறிவித்தது.

எகிப்துத் தூதுவர், ஐ. நா. செயலாளர் ஊதாண்டுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், 'ஐ.நா. சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்திற்கேற்ப, எதிர்த்தரப்பும் (இஸ்ரேல்) போர் நிறுத்தத்துக்குச் சம்மதித்தால் எகிப்தும் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளும் என்று எனது அரசு உங்களுக்குத் தெரிவிக்கிறது' என்று குறிப்பிட்டிருந்தது.

இக்கடிதம், ஊதாண்ட்டினால் அவையில் படிக்கப்பட்டது.

ஐ. நா.-வின் போர் நிறுத்தத் தீர்மானத்தை ஏற்கனவே இஸ்ரேல் ஒப்புக் கொண்டிருந்தது.

ஆகையால், கடந்த நான்கு நாட்களாக மேற்கு ஆசியப் பகுதியில் நடைபெற்றுவந்த கடும் போர் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது.

உண்மையை ஒப்புக்கொண்டது இஸ்ரேல்!

மேற்கு ஆசியப் போரில் முதன் முதல் வெடிக்கப்பட்ட குண்டு தங்களுடையதுதான் என்று இன்று இஸ்ரேல் அதிகாரபூர்வமாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே பேசிய இஸ்ரேல் தூதுவர் இதை வெளியிட்டார்.

அவர், 'அராபியர்களால் சுற்றிலும் வளைக்கப்பட்ட எங்களுக்கு இருந்த ஒரே வழி, அவர்களைத் தாக்குவதாகத்தான் இருந்தது' என்று கூறியிருக்கிறார் ; இதற்காக அவர் எவ்வித மன்னிப்பும் கேட்கத் தயாராக இல்லை.

அவசர அறிவிப்பு, 'எகிப்துதான் முதலில் தாக்க ஆரம்பித்தது' என்று கடந்த திங்களன்று கூறிய இஸ்ரேலின் கூற்றுக்கு முரணானதாகும்.

ஜோர்டான் மன்னர் உசேன் நாட்டைவிட்டு ஓடிவிட்டார் என்ற வதந்தியைப் பொய்யாக்க அவரே இன்று பத்திரிகையாளரிடை தோன்றி பேட்டியளித்தார்.

போர் நிலை பற்றிக் குறிப்பிட்ட அவர், தமது இராணுவம் வீரத்துடனும், திறமையுடனும் போர் புரிந்ததாகப் பாராட்டினார்.

"இஸ்ரேலின் மிகப் பெரிய விமானப் படைத் திறமையால் ஜோர்டான் கடுமையான இழப்புக்கு உள்ளாகிவிட்டிருக்கிறது !" என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார்.

விட்டுவிட இயலாதாம்

பழைய ஜெருசலத்தைப் பிடித்துக்கொண்ட இஸ்ரேல், 'எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்நகரை இனி விட்டுவிடமாட்டோம்' என்று கூறியிருக்கிறது.

யூதர்களின் புனித நகரான ஜெருசலத்தின் பிரார்த்தனைச் சுவருக்கு அருகே இறந்துபட்டோரின் நினைவாக ஒரு சிறப்பு வழிபாட்டுக் கூட்டத்தை யூதர்கள் நடத்தினர்.

இதில் பேசிய பாதுகாப்பு அமைச்சர் டயான், 'நாம் மீண்டும் இங்கு வந்திருக்கிறோம் ; ஜெருசலத்தைப் பிரிக்க இனி அனுமதியோம்' என்று கூறியிருக்கிறார்.

வட்டி வசூலைத் தள்ளிவைக்க மீண்டும் கோரிக்கை

காங்கிரசல்லாத மாநில அரசுகளுடன் சேர்ந்து கூட்டாக எழுப்பப்படும்

ஆட்குறைப்பு--படி அரிசித் திட்டம் ஆகியவை பற்றி அண்ணா

திருச்சி, ஜூன் 7—

மாநில அரசு செலுத்த வேண்டிய கடனுக்காக வட்டித் தொகையை வசூலிப்பதில் காலத் தவணை தர டில்லி அரசு மறுத்துவிட்டது குறித்துத் திட்டம் ஏமாற்றம் அடைந்ததாகத் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு தெரிவித்தார்கள்.

இதுபற்றி, காங்கிரசல்லாத மாநில அரசுகளையெல்லாம் கலந்தாலோசித்து, கூட்டாக வேண்டுகோள் விடுத்து இருப்பதாகவும், வரவு—செலவுத் திட்டச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுற்றதும் இதைச் செய்யலாம் என்றிருப்பதாகவும் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்.

இங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் அண்ணா அவர்கள் மேலும் கூறியதாவது :—

"மத்திய அரசு ஊழியர்கட்கு வழங்கும் அகவிலைப் படியின் அளவுக்கு மாநில அரசு ஊழியர்கட்கும் வழங்கவும், வட்டி வசூலைத் தள்ளிப் போடுமாறும், மத்திய அரசிடம் காங்கிரசல்லாத மாநில அரசுகள் கூட்டாகக் கோரிக்கை எழுப்புவதற்கு முயற்சி செய்வேன்."

ஆட்குறைப்பு இல்லை

செய்தியாளர் கேள்விக்குப் பதிலளிக்கையில் அண்ணா அவர்கள் கூறியதாவது :—

"போலீசுத் துறையில் எந்தப் பதவியையும் நீக்கும் எண்ணம் இல்லை ; தற்போது அதைப் பற்றி நான் சிந்திக்கவே இல்லை."

"ஆட்குறைப்புப் பற்றி பத்திரிகைகள் மிகைப்படுத்திச் செய்தி வெளியிடுகின்றன. ஒரு பத்திரிகை 40 ஐ.ஏ.எஸ். பதவிகளை ஒழிக்க இருப்பதாகவும் செய்தி வெளியிட்டிருந்தது ; இது உண்மையல்ல.

"ஆட்குறைப்பால் பாதிக்கப்படுபவர்கள் வேறு துறைகளில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவர் ; புதிதாக வேலைக்கு நியமனம் செய்யப்படும்போது, ஆட்குறைப்பால் வேலை இழந்தவர்கட்கு முன் சலுகை கொடுக்கப்படும்."

அண்ணா கோரிக்கையை மறுத்ததேன்?

மொரார்ஜி தேசாய் கூறும் சமாதானம்

மக்களவையில் வி. கிருஷ்ணமூர்த்தி கேள்விக்குப் பதில்

புதுடில்லி, ஜூன் 8—

"தமிழக முதலமைச்சர் அண்ணா, இந்த ஆண்டு மத்திய அரசுக்குத் தரவேண்டிய வட்டி வசூலை ஒத்திவைக்குமாறு கேட்டிருந்தாரா ? இது குறித்து நிதியமைச்சர் என்ன செய்யவிருக்கிறார் ?"

என்று நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி கேட்ட கேள்விக்கு நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் பின்வருமாறு பதிலளித்தார் :—

"தமிழக முதலமைச்சர் அண்ணாதுரை, இது சம்பந்தமாக என்னைச் சந்தித்துப் பேசினார்.

"வட்டியை ஒத்திவைக்க வேண்டுமென்ற மாநிலங்களின் கோரிக்கையை ஒத்துக்கொண்டால், ஏற்கனவே மாநிலங்களுக்குத் தர மத்திய அரசால் வாக்களித்திருந்த பண உதவியில், அந்த அளவுக்குக் குறைக்கவேண்டி நேரிடும்.

"மாநிலங்கள் தரவேண்டிய வட்டித் தொகையான ரூ. 195 கோடியையும் சேர்த்துத்தான் மத்திய வரவு-செலவுத் திட்டம் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை தருவதைத் தள்ளிப்போடுவதானால், அந்த அளவுக்கு வரவு-செலவுத் திட்டத்தைக் குறைக்க வேண்டும். மாநிலங்களுக்கே கூட இது நன்மை பயப்பதாக அமையாது."

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., [illegible]

திருவள்ளுவராண்டு 1998 வைகாசி 26 (9—6—67 வெள்ளி

திருவாயும் திறந்தது--தூற்றலும் துவங்கியது!

பொதுத்தேர்தல் முடிவு பெற்று மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. இப்பொதுத் தேர்தல் விளைவித்திருக்கின்ற மாற்றங்கள் பற்பல. அவற்றில் குறிப்பிடத்தக்கது, தமிழக ஆட்சிப் பொறுப்பிலிருந்து காங்கிரசுக் கட்சி அகற்றப்பட்டு, கழகம் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பது.

இத்தேர்தலில் ஏற்பட்ட மற்ருெரு மாற்றம் குறிப்பிடத்தக்கது. காங்கிரசுக் கட்சியில் பெரும் பெரும் தலைவர்கள் என விளம்பரப் படுத்தப்பட்டு வந்திருக்கின்றவர்கள் பலர், முகவரியைத் தேடுகின்ற நிலைக்குத் தாழ்ந்துவிட்டனர்.

தேர்தலுக்கு முன்னர், அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் எதிர்கால அரசியல் அந்தஸ்தைக் குறித்து விதவிதமான கற்பனைகளைச் செய்துகொண்டிருந்தனர். அக்கற்பனை சாம்ராஜ்யத்திலேயே அவர்கள் உலவிக்கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் கட்டிய மனக்கோட்டைகளை, உருவம் பெறவிடாமல் அடியோடு தவிர்த்துவிட்டது பொதுத்தேர்தல் முடிவு.

பொதுத்தேர்தலுக்குப் பின்னர், தாங்கள் காண இருந்த கற்பனை உலகம், தேர்தல் முடிவினால் தவிர்க்கப்பட்டுவிட்டதன் விளைவாக, செய்வதறியாது சித்தப்பிரமை நிலையை எய்திவிட்டனர், காங்கிரசுத் தலைவர்கள்! அவர்கள் அனைவரிலும் கதாநாயகராக விளங்குபவர்தான் அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர்!

'உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி செம்பருந்து ஆகாது' என்ற மகத்தான உண்மையை, பொதுத்தேர்தல் முடிவிலிருந்து அவர், கிடைத்தற்கரிய படிப்பினையாகப் பெற்றார். மூச்சையே இழக்கவேண்டியவர் -- ஆனால், பேச்சை மட்டுமே இழந்துவிட்டார்!

இதன் காரணமாக, தாம் இப்பொழுது வாய் திறக்கப் போவதில்லை -- தம் திருவாயைத் திறக்க நாள் பல செல்லும் -- என்றெல்லாம் கூறாமல் கூறிவந்தார் அந்தக் கனவான். தங்கள் பெருந்தலைவர் இப்படிப் பேசாமடந்தையாக இருக்க முடிவேற்றிருப்பதைக் கேட்ட சில சீடர்கள் மனம் வெதும்பினர்; கண்களைக் கசக்கிக் கொண்டனர்.

காமராசர் திருவாயைத் திறந்தால், எத்தகைய கனனிய மிக்கத் தரமான கருத்து வெள்ளம் கரைபுரண்டு ஓடிவரும் என்பதைத் தமிழகம் இதற்குமுன் கேட்டும் கண்டும் அனுபவித்தும் இருக்கிறது. எனவே, அவர் வாய்திறக்கப்போவதில்லை என்ற முடிவைக் கேட்டதும், அவர் சீடர்கள் வருந்துவதைப்போல், தமிழகம் வருந்தவில்லை; மாறாக, அதைப் பொருட்படுத்தவில்லை. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் வாய்திறவாமல் இருப்பார் காங்கிரசுப் பெருந்தலைவர்? இம்மூன்று மாதங்களாக அவர், வாய்திறவாமலிருந்ததே ஆச்சரியம்! இன்னுமா தமிழகத்தை, அந்த ஆச்சரியத்தில் அவர் ஆழ்த்திக்கொண்டிருப்பார்?

இப்பொழுது தம் திருவாயைத் திறந்துவிட்டார்—அப்பெருந்தலைவர்; தம் திருவாயைத் திறந்ததும், தாம் வழக்கமாகச் செய்துவரும்—தமக்கு மிகவும் இனிப்பளிக்கக்கூடிய—கழகத்தைத் தாக்கும் பணியைத் தொடங்கிவிட்டார்.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த அம்மையார் ஒருவரின் வாழைத் தோட்டத்தை, கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் அழித்துவிட்டார் என்றும், இதுபற்றிக் காங்கிரசார் கொடுத்த புகார் மனுவின்மீது காவல்துறை தக்க நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது என்றும் ஓர் இடம்பெயர்ந்த காங்கிரசுக்காரர் கூறிடக் கேட்டதும் 'அறங்கூறும் ஆற்றல் படைத்தவர்' எனத் தமக்குள் தீர்மானித்துக்கொண்டிருக்கின்ற காமராசர், துள்ளிக் குதித்தெழுந்து—தமது வாய்திறவா முடிவை முறித்துக்கொண்டு—தம் திருவாயைத் திறந்து, 'அரசு இலட்சணம்' எது என்பதை வரையறுத்துக்காட்டி, தமிழக அரசை குற்றவாளிக் கூண்டில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்!

வாழைத் தோட்டம் அழிக்கப்பட்ட வரலாற்றையும், அழித்தவர் எவர் என்ற விளக்கத்தையும் நமது பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதியோடந்தமாகக் கூறிவிட்டார். அமைச்சர் கூறியுள்ளதைவிட, அதுபற்றி மேலும் கூறிட வேறு ஒன்றுமில்லை.

'அரசு முறை' பற்றி இப்பொழுது அரும் விளக்கம் கூறியுள்ள காமராசர் இதற்குமுன் தாம் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த நாளிலாவது அல்லது அமைச்சர்களை ஆட்டிப் படைக்கும் பெரும் பீடத்தில் அமர்ந்திருக்கின்ற இந்த நேரத்திலாவது, காங்கிரசு ஆட்சி 'அரசு முறை வழி' இயங்கிவர வேண்டும் என எடுத்துரைத்திருக்கின்றாரா? 'இல்லை' என்பதுதான் விடையாகும்!!

1962-ம் ஆண்டில் நடைபெற்ற மூன்றாவது பொதுத் தேர்தலில், காமராசரை எதிர்த்துச் சுதந்திரக் கட்சி வேட்பாளர் ஒருவர் போட்டியிட்டார்; அப்பொழுது தமிழகத்தின் முதலமைச்சர் இவர்தான். அத்தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட ஒரு காரணத்துக்காகவே, சுதந்திரக் கட்சி வேட்பாளர்—அவருடைய உறவினர்—அவருடைய ஆதரவாளர்கள் ஆகிய அனைவரின் மிளகாய்த் தோட்டங்களும், துவரைக் காடுகளும், இதே காங்கிரசுக் கனவானின் சீடர்களால் உருத்தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றன! அந்த அழிவுக்கு உள்ளானவர்கள், காவல் துறையின் உதவியை நாடினர்; காவல் துறை, உதவி செய்ய முன்வரவில்லை. தனக்குரிய கடமையிலிருந்து தவறியிருக்கிறது—அப்பொழுது காவல் துறை!

இதுபற்றி அந்த நேரத்தில், 'காங்கிரசுத் தலைவர்' என்ற முறையி[illegible] வாய் திறக்கவில்லை—'தமிழகத்தின் முதலமைச்சர்' என்ற முறையிலும் இவர், வாய் திறக்கவில்லை! உண்மைக்கு மாறான நிகழ்ச்சிக்காக, 'அரசு முறை' பற்றி அவசர அவசரமாக வாய் திறக்கத் துணிந்த அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர், அப்பொழுது வாய்மூடிக் கிடந்தார்! அழிவுப் பணியில் ஈடுபட்ட தமது சீடர்களுக்குப் பாதுகாப்பு அளித்துவரும் பெரும் பணியையும், 'முதலமைச்சர்' என்ற நிலையில், இந்தக் கனவான் செவ்வனே செய்து வந்திருக்கின்றார்!

1967 தேர்தலில் இவரை எதிர்த்துப் போட்டியிட்டு, இவரைத் தோல்வியுறச் செய்த கழக வேட்பாளருடையவும், அவரைச் சார்ந்தவர்களுடையவும் மிளகாய்த் தோட்டங்கள் பாழாக்கப்பட்டது, இவருடைய சீடர்களால்தானே! 'அரசு முறை' என்பதன் பெயரால், அந்த அக்கிரமத்தை இன்றுவரை, இவர் கண்டித்திருப்பாரா?

அப்பொழுதெல்லாம் 'அரசு முறை' எது என்பது பற்றிய அறிவை, காமராசர் பெறாது இருந்தார்போலும்! இப்பொழுதுதான்—தமிழக ஆட்சிப் பொறுப்பைக் கழகம் ஏற்றுக்கொண்டதற்குப் பின்னர்தான், 'அரசு முறை' பற்றிய அறிவைப் பிறர் சொல்ல, இந்தக் கனவான் கற்றுக்கொண்டிருக்கின்றார்போலும்! —கா.க.

மருத்துவ--சுகாதாரத் துறைகள் இணைப்பு

ஆய்வுக்குழு பரிந்துரையை அரசு ஏற்றது

வேலூர், ஜூன் 5—

"பொதுநலத் துறை நெறியகத்தையும் (டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த்) மருத்துவப்பணி நெறியகத்தையும் (டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸ்) ஒருங்கிணைக்கும் கொள்கையைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டது"

என்று, தமிழக நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"பொதுநலத்துறை நெறியகம் மருத்துவப்பணி நெறியகம் ஆகியவற்றின் வேலைகள் பற்றி ஆய்வு செய்யப் பழைய அரசினர் ஒரு குழு அமைத்திருந்தனர்.

"அந்த இரண்டு நெறியகங்களும் தனித் தனியாக இயங்கத் தேவையில்லை; அவற்றை ஒருங்கிணைக்கவேண்டும் என்று அந்தக் குழு ஆய்வு செய்து அறிக்கை அளித்தது. அந்தக் குழுவின் திட்டத்தைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டது. இது தொடர்பாக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தை எதிர்பார்த்து அத்திட்டம் செயற்படுத்தப்படும்.

நாட்டுமருத்துவத்துக்கு ஊக்கமளிப்பு!

அமைச்சர் விளக்கம்

சென்னை, ஜூன் 6—

"சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவர்களுக்குத் தமிழக அரசு முடிந்த அளவு எல்லா வகையான உதவிகளையும் செய்யும்"

என்று, தமிழக நலத்துறை அமைச்சர் சாதிக்பாட்சா தெரிவித்தார்.

தமிழக மாநில இரண்டாவது பிரிவு பதிவு பெற்ற நாட்டு மருத்துவர்கள் சங்கத்தின் ஆண்டு விழா பழைய வண்ணாரப்பேட்டையில் நடைபெற்றது.

அமைச்சர் சாதிக்பாட்சா மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"மருத்துவர்கள், தங்கள் அறிவையும் திறனையும் பணத்திற்காக மட்டுமே பயன்படுத்தாமல், பொதுமக்கள் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும். மருத்துவப் பணி சிறந்த தொண்டாகும்.

"நாட்டு மருத்துவர்களின் சங்கங்கள் எல்லாம் ஒருங்கிணைந்து வரையறுக்கப்பட்ட திட்டங்களைத் தரவேண்டும்."

மீண்டும்

இலண்டனில் பிஜோ

தமது இயக்கத்தினருடன் சந்திப்பு

கௌஹாத்தி, ஜூன் 8—

இலண்டனுக்கு வந்துள்ள தலைமறைவு நாகர்களின் குழுவைச் சந்திக்கும்பொருட்டு அமெரிக்காவிலிருந்த நாகர் தலைவர் பிஜோ இலண்டன் வந்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து செய்தி கிடைத்துள்ளது.

மே மாதத்திலேயே மேற்படி நாகர் குழுவினர், இலண்டன் வந்து சேர்ந்துவிட்டனர். மே மாதக் கடைசியில் பிஜோ இலண்டன் வந்து சேர்ந்ததாகத் தெரிகிறது.

தலைமறைவு நாகர் தூதுக் குழுவினர் இலண்டன் நகரில், பிஜோவிடம் பேச்சுவார்த்தை நடத்த இரண்டு கிழமைகள் தங்கியிருக்கக்கூடும் என ஒரு செய்தி தெரிவிக்கிறது.

தலைமையமைச்சர் பெற்ற பரிசுப் பொருள்கள்

பிர்லாவும் பிற நாட்டு மன்னர்களும் அளித்த விலை மதிப்புமிக்க நகைகள்

டாக்டர் லோகியா வெளியிடும் தகவல்

புதுடில்லி, ஜூன் 7—

இன்று மக்களவையில், வரவு—செலவுத் திட்டத்தின்மீதான விவாதத்தில் கலந்துகொண்ட ச. சோ. கட்சித் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியா, நாடாளுமன்றத்தில், சாகுஜெயின் சார்பில் ஒரு மனுவைத் தாக்கல் செய்வதற்காகத் தாம் ஒரு இலட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்தார்; இப்படிப்பட்ட ஒரு மனுவைப் பற்றிய தகவலே தமக்கு, மனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர்தான் தெரியும் என்றார் அவர்.

அவைத் தலைவரை நோக்கி, டாக்டர் லோகியா, 'ஒரு நாயைக் கொண்டுவந்து உங்கள்மீது வைத்தால் எப்படியும் அந்த நாயை அப்புறப்படுத்தவேண்டுமே தவிர, அதன் விருப்பப்படி விட்டுவிட அனுமதிப்பது கூடாது; அதேபோலத்தான் நானும் செய்யவேண்டியுள்ளது' என்றார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"நமது தலைமையமைச்சர் அமெரிக்கா சென்றிருந்தபோது, பிர்லா ரூ. 10 இலட்சம்வரை செலவு செய்தார்; தலைமை அமைச்சரின் வருகையையொட்டி, அமெரிக்காவில் உள்ள 'நியூயார்க் டைம்ஸ்' இதழ் சார்பில் சிறப்பிதழ் வெளியிடுவதற்காக இந்தப் பணம் செலவிடப்பட்டது.

இந்த உறவு ஏற்பட்டது இப்போதுதான் என்பதில்லை; தலைமை அமைச்சரின் திருமணத்தின் போதே ரூ. 50,000 மதிப்புள்ள அட்டிகை (நெக்லஸ்) பிர்லா சார்பில் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் நான் இப்போது பொருட்படுத்தவில்லை—என்றாலும், இதை எடுத்துக்காட்டவேண்டிய கட்டாயத்துக்கு நான் தள்ளப்பட்டிருக்கிறேன்.

சவூதி அரேபியா மன்னர் நமது தலைமையமைச்சருக்கு ஒரு வைர அட்டிகை (நெக்லஸ்) அன்பளிப்பாக வழங்கியதாகவும் அதனைத் தலைமையமைச்சர், பிறகு ரூ. 10,000-க்கு விற்றுவிட்டதாகவும் கேள்விப்பட்டேன்.

எண்ணெய் மன்னரான சவூதி, இவ்வளவு குறைந்த விலை (ரூ. 10,000) மதிப்புள்ள பொருளை அன்பளிப்பாக வழங்கக்கூடிய அவ்வளவு கஞ்சத்தனம் உள்ளவராகவா இருப்பார்?

நேபாள ராணா வழங்கிய வைரத்தால் ஆன கூடை என்ன ஆயிற்று?"

இப்படிப் பேசிக்கொண்டே சென்ற லோகியா, மேலும் உரத்த குரலில் 'என்னுடைய சொத்து மதிப்பையும் அதே நேரத்தில் தலைமையமைச்சரின் சொத்து மதிப்பையும் பற்றி ஒரு விசாரணை நடத்தப்படுமா?" என்று வினவினார்.

திரு. அனுமந்தையாவும், துணை அவைத் தலைவரும், 'தனிப்பட்ட முறையில் தலைமையமைச்சரைப் பற்றிக் குறிப்பிட வேண்டாம்' என்று கேட்டுக்கொண்டபோது, லோகியா, 'நான் எதையும் தனிப்பட்ட முறையில் கூறவில்லை. எப்போதுமே நான் அப்படிச் செய்ததில்லை; இதையெல்லாம் நான் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது என்றால், நமது சமுதாயத்தில் அவர்களுக்கு முக்கியப் பொறுப்பு இருக்கிறது என்பதால்தான்' என்றார்.

டாக்டர் இரேன் முகர்ஜியும், மற்றவர்களும், முன்னாள் அரசர்களுக்கு மானியம் வழங்குவது ஒழிக்கப்படவேண்டும் என்று கூறியதை டாக்டர் லோகியா ஆதரித்தார். ஆனால், 'இந்த வெட்டு மூலமே வீண் செலவுகள் நிற்காது' என்றார்; 'அமைச்சர்களின் செலவுகளும் கட்டுப்படுத்தப்பட வேண்டும்' என்றார்.

மேலும் பேசுகையில் அவர், செலவுகளுக்கு வரைமுறை செய்ய வேண்டும் என்றும், இந்த நாட்டில் யாரும் மாதம் ரூ. 1,500-க்கு மேல் செலவிட அனுமதிக்கப்படக் கூடாது என்றும் குறிப்பிட்டு, அரசாங்கச் செலவுக் கணக்கைப் பற்றிக் கடுமையான கண்டனம் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு உதவ முன்வரவில்லை!

பணக்கார நாடுகளின் அலட்சியம்

புதுடெல்லி, ஜூன் 8—

"இந்திய விவசாயிகள் தங்களுடைய விளைச்சல் விகிதத்தை பெருக்கிக்கொள்ள இந்தியாவுக்கு உதவவேண்டும்" என்று ஐ. நா. உணவு விவசாய நிறுவனம் விடுத்த வேண்டுகோளுக்கு அந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் பணக்கார நாடுகள் அவ்வளவாகச் செவிசாய்க்கவில்லை.

உலக உணவு விவசாய நிறுவன அதிகாரிகளின் முயற்சிகளின் பலனாக உர வினியோகத் திட்டங்கள் இரண்டுதான் உருப்படியாக உருப்பெற்றுள்ளன.

இத்திட்டங்களுக்கு நிதிகிடைக்க மத்திய அரசாங்கம் சுழல் நிதி ஒன்றை ஏற்படுத்தும். உலக உணவு விவசாய நிறுவனத்தின் பசியிலிருந்து விடுதலை இயக்கத்தின்கீழ் நடத்தப்படும் திட்டங்களுக்கும் அந்த நிதி உதவியாக இருக்கும்.

இந்தியாவுக்கு உதவ வந்[illegible] மூன்று நாடுகள் பிரிட்டன், [illegible] ஜெர்மனி, ஜப்பான் ஆகியவையாகும்.

பிரிட்டன் 1180 டன் உரத்தை நன்கொடையாக அளிக்கிறது. ஜெர்மனி 1000 டன் உரத்தை அளிக்கிறது. உர இறக்குமதிக்கென 20,000 டாலர் அளிக்க ஜப்பானியர் முடிவு செய்துள்ளனர்.

விழுப்புரம் -- விவசாயிகள் மாநாட்டில்..

விழுப்புரத்தில் 3—6—67 அன்று நடந்த விவசாயிகள் மாநாட்டில் ஓர் விவசாயி எழுந்து, சாகுபடியாளர்களுக்குள்ள சங்கடங்களையெல்லாம் விளக்கித் தமது கருத்துக்களையும் துணிவுடன் எடுத்துரைத்துக்கொண்டிருக்கிறார் ; அமைச்சர்கள் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

குடும்பக் கட்டுப்பாட்டு முறையில் தமிழக அரசு காட்டும் அக்கறை

புதிய முறையில் மக்களை அணுக நிபுணர்களின் திட்டம்

கருத்தடை மாத்திரை தயாரிக்கத் தமிழகத்தில் தொழிற்சாலை--- அமைச்சர் சாதிக் பாட்சா தரும் தகவல்

சென்னை, சூன் 8—

"தமிழகத்தின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் இதற்கு முன்னர் இருந்ததைவிட மிகவும் எடுத்துக்காட்டான அடிப்படையில் அமைந்து, புதிய நடவடிக்கைகளை எடுப்பதற்காகத் தமிழக அரசு அத்திட்டத்தை முற்றிலும் புதிய முறையில் அணுகக் கருதியுள்ளது.

"குடும்பக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்துவதற்கு நிபுணர்கள் புதிய திட்டமொன்றை வகுத்துவருகின்றனர் ; அது பற்றிய விவரங்கள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

"இக்குறிப்பிட்ட இத்திட்டத்தினால் மாநில அரசிற்குப் பெருந் தொகை செலவானதுடன், அது சாதித்திருக்கவேண்டியதைக் கூடச் சாதிக்கத் தவறிவிட்டது ; இதற்கு முன்பிருந்த அரசானது, கருத்தடை அறுவையில் மட்டுமே நம்பிக்கைவைத்து, மற்ற கருத்தடை முறைகளைப் புறக்கணித்துவிட்டது ; கருத்தடை அறுவை முற்றிலும் மாநில அரசின் நடவடிக்கையென்று மத்திய அரசு நிதியுதவி செய்ய விருப்பம் காட்டாதபோதிலும், முந்திய அரசு அதிலேயே மிகுந்த நம்பிக்கை வைத்துவிட்டது"

என்று தமிழக சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா, 'நேபனு'க்கு அளித்த சிறப்புப் பேட்டியில் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது :---

மாநிலக் குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை கிராமப் பகுதிகளில் கருத்தடை அறுவைகளைச் செய்து இதுவரை அடைந்துள்ள வெற்றிகளைப் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரிப்பது —இத்திட்டம் கடந்த பத்தாண்டுகளில் இம்மாநிலத்தின் மக்கட்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் எவ்வளவு தூரம் பலன் கொடுத்திருக்கிறது என்பதை அறிவது — என்று மாநில அரசு முதலாவதாகக் கருதுகிறது.

"கிராமப்புற மக்கள் தாமாக முன்வந்து கருத்தடை அறுவையைச் செய்துகொள்வதில் போதிய ஆர்வம் காட்டவில்லை ; அதனால் இப்பணிகளைக் கிராமப் பகுதிகளில் சரியாக நிறைவேற்றுவதில் போதிய முன்னேற்றமில்லை" என்பது சுகாதார அமைச்சகத்திற்கு வரும் தகவல்களிலிருந்து தெரிகிறது.

"கருத்தடை அறுவைத் திட்டப்பணி 1957-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டதிலிருந்து மாநில அரசிற்கு இதுவரையிலும் சுமார் ரூ. 3 கோடி செலவாகியிருக்கிறது" என்று மேம்போக்காக மதிப்பிடப்பட்டுள்ளது ; ஊதியம் பெற்று வேலை செய்யும் கையாட்கள், அறுவை செய்ய முன்வரும் ஆண்களைப் பிடித்தல் ஆகியன மூலம் இத்திட்டத்தை விளம்பரப்படுத்துவதற்கு இத்தொகை செலவாகியிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டப் பணிகளின் அடிப்படையைப் புதிய அரசு இப்போது விரிவுபடுத்தக் கருதுகிறது. நாங்கள் கருத்தடை செய்ய ஆட்களைக் கொண்டுவரும் கையாட்களை நீக்கப்போகிறோம் ; ஏனெனில், அவர்கள் கிராமப் பகுதிகளிலுள்ள மக்களை மனோதத்துவ முறையில அணுகி மனப்பக்குவமடையச் செய்வதற்கு மாறாக, ஆள்பிடிக்கும் தரகர்கள் என்ற எண்ணத்தை உண்டாக்குகின்றனர்.

சமுதாய நலப் பிரிவுகளிலுள்ள ஆட்களைக் குறைத்து அவர்களைக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு மாற்றி இத்திட்டத்தை விரிக்கவும், மாநில அரசு கருதுகிறது ; அப்போதுதான் அவர்கள் ஒதுங்கிக் கிடக்கும் கிராமங்களுக்குச் சென்று இத்திட்டம் நல்ல முறையில் நடைபெற முடியும்.

மாநிலக் குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை வகுத்திருக்கும் திட்டங்களில், வழக்கிலுள்ள கருத்தடைக் கருவிகள் அல்லது 'எனோவிட்' எனப்படும் உட்கொள்ளும் மாத்திரை ஆகியவற்றைச் செய்யும் ஓர் ஆலையைத் தமிழகத்தில் நிறுவுவதும் ஒன்றாகும் ; இம்மாத்திரையைப் பெருமளவில் செய்தால், நாள்தோறும் பெண்கள் பயன்படுத்துவதற்காக அதைப் பிரபலப்படுத்த முடியும். அவ்வாலையை அமைக்கும் செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் ; அத்துடன் மாத்திரையைக் குறைந்த விலையில் விற்கவும் உதவியளிக்கும்.

"குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை உண்மையான முறையில் அணுகினால், அது மக்களுக்கு உண்மையான ஆறுதலை அளிக்கும் ; அவர்கள் மனத்தில் இப்போது இருந்து வரும் அக்கறையின்மையும், அச்சமும் மறையும்."

வட்டிக்கடையில் நகையும் பணமும் களவு

திருக்கோவிலூர், சூன் 5—

இங்கு வட்டிக் கடைக்காரர் ஒருவரின் வீட்டில் ரூ. 1,30,000 பெறுமானமுள்ள நகைகளும் ரூ. 37,000 ரொக்கப் பணமும் கடந்த சனிக்கிழமையன்று கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இது தொடர்பாக போலீசு சூப்பரின்டெண்டு வி. சையது ...லாவி தாங்கலும், தனிப் போலீ...க்காரரும் இங்கு தங்கியிருந்து ...பறிந்துவருகின்றனர்.

...ர் ஆசிரியரின் வீட்டில் கடந்த ...ற்றுக்கிழமையன்று சில திரு... நுழைந்து, அவருடைய ...பக் கட்டி, மாவரைக்கும் ... ஆசிரியரின் தலையில் ...விட்டுத் தப்பிவிட்டனராம்.

'அண்ணா--- சிறந்த இராசதந்திரி'

தூதுவர் கண்ணம்பிள்ளி புகழுரை

அண்மைக் காலம்வரையில் மத்திய அரசாங்கத்தில் பல இலாகாக்களிலும் முக்கியப் பதவி வகித்துவந்தவரும் முன்னாள் டென்மார்க் தூதுவரும் இப்பொழுது இந்தோனேஷியாவில் இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டிருப்பவருமான கே. எம். கண்ணம்பிள்ளி, அறிஞர் அண்ணாவின் அறிவாற்றலைப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்.

மலையாள நாளிதழான 'மாத்ருபூமி'யின் நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் அவர் கூறியிருப்பதாவது :—

"தமிழக முதலமைச்சர் அண்ணாதுரை, தலைசிறந்த இராசதந்திரிகளில் ஒருவராவார் ; அவர் வெளியிடும் கருத்துக்களில் அது நன்கு பிரதிபலிக்கிறது."

மாநில அரசா? மானிய அரசா?

"மாநில அரசுகள், விற்பனை வரி, நில வரி, இரண்டை மட்டும் வைத்துக்கொண்டு எப்படி ஆட்சி நடத்த முடியும் ?

"அழுகும் பொருளுக்கு வரி விதிக்கக்கூடாது என்று வியாபாரிகள் கேட்டுக்கொள்கிறார்கள்.

"நில வரியை எடுத்துக்கொண்டால், மழை அதிகம் பெய்தால் வரியைக் குறைக்க வேண்டும் ; மழை இல்லாவிட்டால் வரியைக் குறைக்கவேண்டும். புயல் அடித்தால் வரியைக் குறைக்கவேண்டும்.

"மற்றுமுள்ள வரிகள் அனைத்தையும் மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு, மாநில அரசுகள், மானியத்திற்காகக் கையேந்தும் நிலையில் உள்ளன.

"மாநில அரசுகள் திட்டங்களைப் போட்டுச் செயல்பட முடியாத நிலையில், மானிய அரசாக வைத்துள்ளனர் மத்திய அரசினர் !"

---ம. பொ. சிவஞானம்
(துறைமுகத் தொகுதிக் கூட்டத்தில்)

உணர்வோர் உள்ளம்

பதிவுப் பத்திரத் தட்டுப்பாடு!

ஐயா,

பதிவுப் பத்திரங்கள் கிடைக்காமல் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எந்த ஒரு பத்திர விற்பனையாளரிடம் போய்க் கேட்டாலும், 'பத்திரங்கள் கைவசம் இல்லை'யென்று கூறிக் கையை விரித்துவிடுகிறார்கள். இதனால், அரசாங்க வருவாய் மிகவும் பாதிக்கப்படுகிறது.

மேலும், இதை ஒரு சந்தர்ப்பமாக வைத்துக்கொண்டு ஒரு சில விற்பனையாளர்கள் வெளியூர்களிலிருந்து பத்திரங்களை வாங்கி வைத்துக்கொண்டு, கள்ளமார்க்கெட்டில் விற்பனை செய்து வருகிறார்கள்.

இதைத் தவிர்க்க, தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, தேவையான பத்திரங்கள் தங்குதடையின்றிக் கிடைக்கவேண்டிய துரித ஏற்பாடுகள் செய்து தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அப்பத்திரங்கள் விநியோகம் செய்வதில் காலதாமதம் ஏற்படும் என்று கருதப்பட்டால், ஓர் இடைக்கால ஏற்பாடாக, பத்திரங்களுக்குப் பதில் சாதாரண கெட்டித் தாள்களில் பத்திர ஷரத்துக்களை எழுத அனுமதியளித்து, பத்திரங்களுக்கான தொகைகளை சம்பந்தப்பட்ட பதிவாளர்கள் ரொக்கமாகப் பெற்றுக்கொண்டு பதிவு செய்து கொடுக்க அனுமதியளிப்பது பொதுமக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும்.

தமிழக அரசு இதுபற்றிப் பரிசீலனை செய்து, துரித நடவடிக்கைகள் எடுத்துதவ வேண்டுமெனக் கோருகிறேன்.

எச். தங்கசாமி எம்.சி.
புதுக்கோட்டை.

★

கல்லூரி விண்ணப்பக் கட்டணம்

கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் (பி.யூ.சி.) சேருவதற்கான மனுத்தாள்களை நான்கு ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள்.

அந்த ஒரு காகிதத்திற்கு எதற்காக ரூ. 4 என்று கேட்டால், பதிவுத் தொகையும் சேர்த்து வாங்குவதாகக் கூறுகிறார்கள்.

கல்லூரிகளால் நிராகரிக்கப்படும் மனுக்களுக்கும், அக்கல்லூரியில் சேர விரும்பாத மாணவர்களின் மனுக்களுக்கும் பதிவு செய்யத் தேவையில்லை. அக்கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படுகிற மாணவர்களுக்கு மட்டும்தான் அது தேவை என நினைக்கிறேன்.

ஆகவே, அதைக் கல்லூரிக்குச் செலுத்தும் முதல் சம்பளத்துடன் சேர்த்து வாங்கிக்கொண்டு, மனுத்தாள்களை ஒரு ரூபாய்க்குக் கொடுக்கலாம். இதனால் ஏழைகளும், மூன்று நான்கு கல்லூரிகளுக்கு மனுச் செய்பவர்களும் பயனடைவர்.

ஆனால் இப்பொழுது ஆயிரக்கணக்கில் மனுத்தாள்கள் விற்பதால், அத்தனை நான்கு ரூபாய்களையும் கல்லூரிகள் ஒவ்வொரு ஆண்டும் இலாபமாகப் பெறுகின்றன.

ஆகவே இதற்குப் பொறுப்பானவர்கள் இவ்வாண்டில் இல்லாவிட்டாலும் வருகிற ஆண்டிலாவது ஆவன செய்வர் என எதிர்பார்க்கிறேன். நன்றி.

இரத்தினசபாபதி
திருச்சிராப்பள்ளி

★

வணிக வரித் துறையை சீராக்குக!

'சென்னை மாநில ஆட்சி' பெருமைப்படும் விதத்தில் தமிழக அரசு ஆனதிலிருந்து, அரசினர் பணியிலேசெய்த ஆட்குறைப்பு முதலிய சீர்திருத்தங்கள், அரசியல் நோக்கத்தாற் பிணிகொண்டாரைத் தவிர்த்து யாவரும் மகிழ்ந்து வரவேற்பவையாகும்.

உறவுக்கும், கட்சிப் பணிக்கும் பரிசாக உண்டாக்கப்பட்ட பல பதவிகளை ஒழித்த தமிழக அரசு உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

விளம்பரத் துறை போன்றவை வேண்டியவர்க்கு அரசுக் கட்டிலேற அமைந்த நுழைவாயிலாக இயங்கி வந்தது யாரோ அறியார் ?

மக்கள் வரிப்பணத்தை வீணான செலவினங்களில் செலுத்த விழையா, அரசிற்கு மக்களின் ஒத்துழைப்பு என்றும் உண்டு. எனவே, அரசு தனது பணியிற் தொடர்ந்து செல்க. இது தொடர்பாக ஒரு கருத்தை அரசினர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

வணிகத் துறையில், உதவி வணிக வரி அலுவலர்—துணை வணிக வரி அலுவலர் என்ற இரு பிரிவினருக்கு மேல், சில ஆண்டுகள் முன்பு வணிக வரி அலுவலர் இருந்தனர். இப்பொழுது இணை வணிக வரி அலுவலர் என்ற அரசிதழ் பதிவு பெற்ற பதவி ஒன்றை உண்டாக்கி உள்ளனர். துணை வணிக வரி அலுவலருக்கும், இப்புதிய பதவியினருக்கும், பணியிலோ அன்றி வேறு பொறுப்பிலோ தினைத்துணையும் வேறுபாடு இல்லை. துணை வணிக வரி அலுவலர் செய்யும் பணியையே இவரும் செய்கிறார். இருப்பினும், இப் புதுப் பதவிக்கு, அதிக சம்பளம் முதலிய கூடுதற் பயன்கள் உண்டு. இது சமநீதிக்குப் புறம்பானது. ஒரே வேலைக்கு ஒரே பொறுப்புக்கு இரு வேறு பதவிகளும், சம்பள விகிதமும் எப்படிப் பொருந்தும் ?

இப்பொருந்தாத—நீதியற்ற—இணை வணிக வரி அதிகாரி பதவியை ஒழித்து, முன்போலவே செய்வது நாட்டிற்குத் தேவையான சீர்திருத்தமாகும்.

சரசுவதி
கோவை-11.

கடுகு சிறுத்தாலும்...!

'நடிக்கும்போது சிரிப்பது கடினமா? அல்லது அழுவது சிரமமா?' என்று கேட்கப் பட்டதற்கு, கலைவாணர் என். எஸ். கே. ஒருமுறை அளித்த பதில், 'சிரிப்பது தான் கொஞ்சம் கஷ்டமான நடிப்பு' என்பதுதான்!

ஆனால் பெரும்பாலோர் நினைத்துக்கொண்டிருப்பதோ, 'அழுது நடிப்பதுதான் கடினம்' என்பதாகும்!

'நம் நாடு' இதழ், துவக்க முதல் சிறிய அளவில் இருந்தது; இடையில் சில காலம் இரண்டு மடங்கு பெரிதாகியது; இப்போது மீண்டும் ஆரம்ப நிலை!

இந்தக் கட்டத்தில், 'பெரிய இதழ் நடத்தியபோது சிரமமாக இருந்ததா? அல்லது இப்போது மீண்டும் சிறிய அளவில் வெளியிடுவதற்குக் கடினமாக இருக்கிறதா?' என்று கேட்டால், இத்தரப்பில் உள்ளவர்களின் பதில், இரண்டாவது வகையானதாகத் தான் இருக்கிறது!

"கடமைகள் பெரிதாகியுள்ள நிலையில் அளவு சிறியதாகியுள்ளது; நிறைய எதிர்பார்க்கும் நிலையில் குறைவாகத்தானே கொடுக்க முடிகிறது?" என்ற சங்கடம்!

நடிப்பில், 'சிரிப்பதுதான் சுலபம்' என்று சிலர் தவருகக் கருதிக்கொண்டிருப்பதுபோல் 'அளவில் சிறிய பத்திரிகை நடத்துவதுதான் கடினமில்லாத காரியம்' என்று நினைத்துவிட வேண்டாம்!

கழகத்தின் தேர்தல் களத்தில் 'நம் நாடு' இதழும் ஒரு 'அணி'யில் இருந்தது! பாராட்டுதல்களோடு--கணிசமான பின்பற்றுதலையும் பெற்றது!

காலம்—தேவை — இரண்டினைக் கருதி, இருந்த வசதிகளிலேயே அளவில் இரட்டிப்பான 'நம் நாடு' இதழ் மீண்டும், பழைய முறையில் தொடருகிறது!

சமயம் நேரும்போது தற்காப்புக்காக உருவமே மாறி, புது உறுதி பெறும் உயிரினங்கள் உண்டு!

'சிறு பழத்தொரு விதை' தான், உயர்ந்து விரிந்த ஆலமரமாகிறது!

கழகம் ஆட்சிக்கு வருவதற்குக் காரணமாக இருந்த '1967' துவக்கத்தின்போது அளவில் பெரிதாகி, சில நாட்கள் கடமையை ஆற்றிய பெருமையுடன், இப்போது தொடர்ந்து பழைய நிலையில் உங்கள் கரங்களை வந்தடைகிறது!

எல்லா வகைச் சத்துக்களும் அடங்கிய உணவுக்கு—விஞ்ஞானத்தில்—'கலப்பு உணவு' என்று பெயர்!

எல்லாச் செய்திகளையும் எதிர்பார்க்கும் வாசகர்களுக்கு, 'இட நெருக்கடி' என்ற பழைய நிலை காரணமாக, 'நம் நாடு' இதழ், ஒரு கலப்பு உணவாக இருக்கிறது என்ற குறை ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான்!

'நடந்தவை வெளியாகவில்லையே' என்பவர்கள்—'நடக்க இருப்பவை'களை ஏன் போடவில்லை' எனக் கேட்பவர்கள்—'பேச்சு ஏன் முழுமையாக வரவில்லை' என்று எதிர்பார்ப்பவர்கள்—'மற்றையச் செய்திகளை இன்னும் சற்று விரிவாகத் தரலாமே' எனக் கூறுபவர்கள்—ஆகிய அனைவரும் தெரிகிருர்கள்!

சீராகவேண்டுமென்ருல், பாத்திரம் கொள்ளும் மட்டும் தானியத்தைப் போடவேண்டும்.

'அளவு அதிகம் தரமுடியாமை' ஒன்ற ஒரு தட்டுப்பாடு இருக்கலாம்; ஆனல், 'கொடுப்பதையும் முழுவேக்காட்டுடன் கொடுக்கவேண்டும்' என்ற கடமை இருக்கிறது.

அதை முழு அளவில் நிறைவேற்றும் 'நம்நாடு'!

"எல்லா வசதிகளுடனும், ஏன் தொடர்ந்து பெரிய அளவில் வரக் கூடாது?" என நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் கேட்கும் கேள்வி, ஆக்கபூர்வமான ஒத்துழைப்புக்கு வழிகோலும்!

ஆனல் அதுவரையில், 'சிறிய அளவுதானே' என்ற 'அலட்சியம்' வேண்டாம்!

"சுடாத பழம் கேட்டுவிட்டு, ஊதித் தின்கிருயே பாட்டி' என்று ஔவையின் தமிழுடன் விளையாடிய மாட்டுக்காரச் சிறுவனின் கதைதான் நினைவுக்கு வருகிறது!

செய்தி உலகுக்கு இந்த இதழ், என்றும் ஒரு சேர்க்கையாகவே இருக்கும்!

—எஸ். ஆர்.

'விலைவாசியைக் குறைக்காவிடில் மக்கள் நம்பிக்கையை இழந்துவிடுவீர்'

ஆளுங்கட்சி உறுப்பினரே எச்சரிக்கிருர்!

புதுடில்லி, சூன் 7—

"இவ்வாண்டு இறுதிக்குள், விலைவாசிகளைக் குறைக்கத் தவறினல், இந்த அரசு மக்கள் நம்பிக்கையை இழந்துவிடும்" என்று, மக்களவையில் எச்சரித்த உறுப்பினரான அனுமந்தையா, "இதனைச் செய்ய இதுவே உங்களுக்குக் கடைசி வாய்ப்பு" என்றும் அரசுக்கு அறிவுறுத்தினர்.

"அகவிலைப் படி குறித்து கஜேந்திர கட்கார் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தினல் விலைகள் மேலும் உயர வழியேற்படும்" என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளிடையேயும் நாட்டின் மனித சக்தி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

நிர்வாகத் துறையில் தேவையில்லாமல் அதிகப்படியாக இருக்கும் ஊழியர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டும்.

ஆனல், முன்பு இருந்த அதே தரத்தில்—அதே மாதிரியான பதவியில்—அல்லது அதே அலுவலகத்தில் நியமிக்கத் தேவையில்லை.

இதனல் நிர்வாகச் செலவு குறைவது மட்டுமல்ல—உற்பத்தியும் கூடும். அதன் பிறகு விலைகளும் தாமே குறைந்துவிடும்!"

10 புதிய கல்லூரிகள்

சேலம், சூன் 7—

தமிழகத்தில் இவ்வாண்டு புதிதாக 10 கல்லூரிகளைத் துவககத்தில் திட்டமிட்டிருப்பதாகக் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மதுரை நகர் தி. மு. க. தோழர்களுக்கு

"11—6—67 காலை 7-மணியளவில், பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணநிதி அவர்கள் மதுரைக்கு வருகை தருகிருர்; நகர் தி. மு. க. சார்பில் சார்பில்—மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் புகைவண்டி நிலையத்தில் அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்படும்; தோழர்கள் அனைவரும் கழகக் கொடிகளுடன் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்"

என்று மதுரை நகர் தி.மு.க. செயலாளர் கு. திருப்பதி பி.ஏ.பி.எல். கேட்டுக்கொள்கிருர்.

அமைச்சர் மாதவன் சுற்றுப்பயணம்

சூன் 10: தஞ்சை—நிகழ்ச்சிகளில் பங்கேற்பு; இரவு 11-மணி: மதுரை வருகை—தங்கல்;

சூன் 11: காலை 9-மணி: இராசபாளையம்; பிற்பகல் 1-மணி: குற்ருலம்—தங்கல்; மாலை 3-மணி: ஆலங்குளம்—பீடித் தொழிலாளர் மாநாடு.

சூன் 12 காலை 9-மணி: தென்காசியில் குற்ருலம் அரிமா லயன்ஸ் சங்கவரவேற்பு; மாலை 3-30 மணி: தென்காசி சுழற்குழு வரவேற்பு; மாலை 5-மணி: கல்லிடைக்குறிச்சி; மாலை 6-30 மணி: திருநெல்வேலி—கூட்டுறவு அர்பன் பாங்கி பொன் விழா.

சென்னை மாநகராட்சிக் குழுவினர் சோவியத் சுற்றுப்பயணம்

சூன் 19: சென்னையிலிருந்து புறப்படுதல்; 20, 21: புதுடில்லி; 22: மாஸ்கோ சேருதல்; 23 முதல் சூலை 3 வரை: இரஷ்யாவில்; 4: வார்சா; 5, 6, 7: போலந்து; 8: வார்சா, பெர்லின்; 9 முதல் 15 வரை: கிழக்கு ஜெர்மனி; 16: பெர்லின்—மாஸ்கோ; 17: மாஸ்கோ—சென்னை,

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

சூன் 11: மதுரை, ஜோகில்பட்டி, விருதுநகர்; 12: திண்டுக்கல்; 13: விடத்திக்குளம்; 14: காடமங்கலம்; 17: முகவூர்; 18: நத்தம்பட்டி; 23: கொழுந்துரை; 25: செல்லூர்.

கள்ளக் கடத்தலைத் தடுக்கப் புதிய ஏற்பாடு

கேரளத்தில் அரிசி இருப்பு விதி மாறுகிறது

திருவனந்தபுரம், சூன் 9—

"இருபது குவிண்டால் நெல்லோ பத்து குவிண்டால் அரிசியோ வைத்திருப்பவர், 'உணவுப் பொருள் இருப்பு வைத்திருப்பவர்' என்று கருதப்படுவார்"

என்று, கேரளத்தின் நெல்-அரிசி இருப்பு தொடர்பான விதி மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு, 40 குவிண்டால் நெல்லோ 25 குவிண்டால் அரிசியோ வைத்திருப்பவர், 'உணவுப் பொருள் இருப்பு வைத்திருப்பவர்' எனக் கருதப்பட்டது.

உணவுப் பொருள் இருப்பு வைத்திருப்பவர் எவராக இருந்தாலும், பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை இருப்பு நிலைமையை அரசுக்குத் தெரிவிக்கவேண்டும். அரசுக்குத் தேவைப்பட்டால், இருப்பு வைத்திருப்பவர்கள் அரிசியையே அல்லது நெல்லையோ அரசுக்கு விற்பனை செய்துவிட வேண்டும்.

"தணிக்கைச் சாவடிகள் அகற்றப்பட்டதால், கள்ளக்கடத்தல் ஏற்பட வழியேற்படும்; கள்ளக் கடத்தலைத் தடுக்கவே இந்த விதி மாற்றப்பட்டுள்ளது" என்று அரசாங்கச் சார்பில் கூறப்படுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

10--6--67

ஆவடி

நகர் தி. மு. க. சார்பில் நன்றியறிவிப்பு; திருப்பெரும்புதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி. இராசரத்தினம் அவர்களுக்கு பாராட்டு: மாலை 6-30 மணிக்கு காமராசர் நகர் கமல விநாயகர் சாலையில்; பேசுவோர்: வேலூர் நாராயணன் எம்.சி,, கேரளீயன், இளம்பரிதி, பி. சின்னசாமி, சங்கரப்யா, க. அ. மு. சேக் முகைதீன், மற்றும் பலர்.

செம்புளிச்சாம்பாளையம்

தி. மு. கழகச் சார்பில் மாலை 7 மணிக்கு அண்ணு திடலில்; தலைவர்: ப. பெ. இராமசாமி; வரவேற்பு: அ. க. துரைராசு; பேசுவோர்: மு. சின்னசாமி எம்.எல்.ஏ., பி. கே. சுப்பிரமணியம் பி.ஏ.பி.டி., பி.எல்., சிவ. நடராசன், இரா. செங்குட்டுவன், ஏ. ஆர். கோவிந்தசாமி, அ. வெற்றிவேல், ஏ. கே. ஆறுமுகம், மற்றும் பலர்.

சென்னை 15-வது வட்டம்

தி. மு. க. ஆதரவாளர்கள் சார்பில் மாலை 7-மணிக்கு ஜில்ஸ் தெருவில்; பிரபாத் டாக்கீசுக்கு அருகில்; தலைவர்: பி. துரைக்கண்ணு; பேசுவோர்: அமைச்சர் முத்துசாமி, துரை முருகன் பி.ஏ., எம். ஆர். ஆர். வாசு, இளம்பரிதி, எஸ். பாலன், ந. முருகேசன், ந. இராமதாசு, ம. தேவராசன்.

11--6--67

மதுரை

நகர் தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: கு. திருப்பதி பி.ஏ. பி.எல்.; பேசுவோர்: அமைச்சர் மு. கருணநிதி; எஸ். முத்து எம்.எல்.சி., மற்றும் கழகச் சட்டமன்ற — பாராளுமன்ற உறுப்பினர்கள்.

காஞ்சிபுரம்

16-வது வட்ட சாம்பசிவனர் படிப்பக ஆண்டு விழா; மாலை 6 மணிக்கு வணிகர் வீதியில்; தலைவர்: சி. எஸ். பூஞ்சோலை; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., காஞ்சி கல்யாணசுந்தரம், என். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., கே. டி. எஸ். மணி எம்.சி., எஸ். முருகேசன் எம்.சி., கு. ப. கண்ணன்.

கோவை நகர்

9-வது வட்டார தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ராம் நகர் இராமர் கோயில் பின்புறமுள்ள திடலில்; தலைவர்: சா. கோவிந்தராசன்; பேசுவோர்: ஜே. மாதா கவுடர், மே. சி. தூயமணி, ப. கோபால், எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.சி., கேரள சுந்தரம், க. மருதாசலம்.

நெடுந்தெரு

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு திலகர் சதுக்கத்தில்; தலைவர்: ப. இருளாண்டி; பேசுவோர்: ஒய். சேவியர், திருமதி கிரேசின் சேவியர், அர. சௌந்திரராசன், வலங்கை என். சாமிநாதன்.

குழுக் கூட்டம்

"சிவகாசி தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 11—6—67 காலை 10-மணியளவில், சரசுவதி திரைப்பட அரங்கில், அவைத் தலைவர் ச. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும்; உறுப்பினர் சீட்டுடன் கலந்துகொள்ளுமாறு கழக உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்" என்று செயலாளர் ஏ. துரைக்கண்ணன் அறிவிக்கிருர்.

Department Of Technical Education, Madras-25.

NOTIFICATION

Applications are invited for admission to the following Post Diploma Courses of one and a half years' duration including six months practical Training at the undermentioned Polytechnics.

1.	Automobile Engineering:	Tamilnad Polytechnic, Madurai.
2.	Town and Country Planning:	Central Polytechnic, Adyar, Madras-20.

MINIMUM QUALIFICATION FOR ADMISSION:

1.	Automobile Engineering:	A diploma in Automobile Engineering or Mechanical Engineering.
2.	Town and Country Planning:	A diploma in Civil Engineering.

Last date for receipt of application for admission to the above courses by the Principals of the Polytechnics concerned is 10—7—67.

Fifty percent of the students admitted to the above Post Diploma Courses will be given stipends at the rate of Rs 50/- p.m.

Application forms and other particulars can be had from the Principal of the Polytechnic concerned on requisition with a self addressed stamped (20 paise) envelope (size 10''x4½'').

The requisition should be accompanied by a crossed Postal Order for Re. 1/- which should not be dated earlier than 10—6—67 drawn in favour of the principal of the Polytechnic to whom the requisition is made.

DIRECTOR OF TECHNICAL EDUCATION
Madras-25.

வேலை இழக்கும் ஆசிரியர்கள்

'எண்ணிக்கை குறைக்கப்படும்' என அமைச்சர் அறிவிப்பு

ஐதராபாத், சூன் 9—

"ஆட்குறைப்புக் காரணமாக 12,000 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை வேலையிலிருந்து அகற்றுவதாக இருந்த ஆணையை ஆந்திர மாநில அரசு திரும்பப் பெற்றுள்ளது"

"ஆனல், '12,000 பேர் வேலை இழக்காவிட்டாலும், குறைந்த அளவினர் வேலை இழக்க நேரிடும்' என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்ணு தலைமையில் திருமணம்

மதுரை சட்டமன்ற உறுப்பினர் சி. கோவிந்தராசன் அவர்களின் மகள் செல்வி: மங்கையர்க்கரசிக்கும்—பெங்களூர் திரு. டி. எஸ். இராமன் அவர்களின் மகன் செல்வன்: செயபாலுக்கும் 11—6—67 காலை 9-மணியளவில், திருப்பரங்குன்றம் நெல்லுக்கடை மண்டபத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்; அமைச்சர் மு. கருணநிதி, அவைத் தலைவர் சி. பா. ஆதித்தனர், எஸ். முத்து எம்.எல்.சி., டி. ஐயன்பெ[illegible] மாள் (கோனர்), மற்றும் ப[illegible] வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்[illegible] திரு. இரா. செழியன் எம்.ஏ[illegible] அவர்களை ஆசிரியராகவும், [illegible] ராகவும், அச்சிடுபவராகவும் [illegible] அழகிரி அச்சகத்தில் (24, [illegible] யண செட்டித் தெரு, [illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிற[illegible]